ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

விரோதிகிருது
பங்குனி

APRIL
1972

தொகுதி 34
பகுதி 4

Vol. 34
No. 4

ஆசிரியர் & பிரகாசகர்த்தா:
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

உலக ஸம்ஸ்கிருத மகாநாட்டில்
ஆயுர்வேதக் கருத்தரங்கு ... 65

ஆரோக்கிய கல்பத்துருமம் ... 67

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய
ஆர்ய வைத்தியசாலா
கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered — THE ARYA VAIDYA SALA KOTTAKAL — Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் — போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் — போன் நெ. 44
தலைமை வைத்யர் — போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி — (வீடு) போன் நெ. 27
(ஆபீஸ்) போன் நெ. 61
மானேஜர் — (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயாதரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்

31-A, சின்னகடைத் தெரு,

திருச்சிராப்பள்ளி-2.

போன் எண் : 4202.

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்த விருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப் பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON, GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M/s. KALIA BROTHERS (Regd)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram : KALIA

Phone : Office - 3232
Resi - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,

கோரோசனை மற்றும் மருநது சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்)

தந்தி: KALIA

போன் : ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்" P. B. No. 1382. போன் : 26006

ஸ்ரீ ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள் :

1.	23 B, பூஸா ரோடு, புது டில்லி :	போன் ;	585687
2.	மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,,	2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,,	85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18	,,	32219
5.	பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1	,,	92
6.	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,,	195
7.	கடைவீதி, பொன்னானி	,,	41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1	,,	378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,,	87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு		
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	,,	33758
12	இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2	,,	4891
13.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2		
14	No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)		

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML ரூ. 7-00; 12 ML. ரூ.3–75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 34	விரோதிகிருது பங்குனி	பகுதி 4
Vol. 34	1972 ஏப்ரல்	No. 4

॥ श्री धन्वन्तरये नमः ॥

உலக ஸம்ஸ்கிருத மகாநாட்டில் ஆயுர்வேதக் கருத்தரங்கு

டெல்லியில் சென்ற மார்ச்சு 28, 29. 30 தேதிகளில் நிகழ்ந்த உலக ஸம்ஸ்கிருத மகாநாட்டில் ஓர் அங்கமாக ஆயுர்வேதக் கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடந்தேறியதை யறிந்து மிகவும் மகிழ்கிறோம். நமது ஆசிரியரும் தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத் தலைவருமான ஸ்ரீ ஈச்வரன் அவர்களும் இதில் கலந்துகொண்டார்.

இந்திய வைத்திய ஹோமியோபதி ஆராய்ச்சி மத்தியக் கழகத்தினர் இதை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். பாண்டிச்சேரியில் உள்ள இந்திய பிரஞ்சு கலாசார ஆராய்ச்சித்துறைத் தலைவர் ஸ்ரீ ஜான் பில்லிஸோவா அவர்கள் தலைமையில் நிகழ்ந்த இந்தக் கருத்தரங்கு இந்திய வைத்திய சென்டிரல் கவுன்ஸிலின் தலைவர்

பண்டிட் சிவசர்மா அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். டாக்டர் P.M. மேஹ்தா பம்பாய், வைத்ய பகவான் தாஸ், ஸ்ரீ ஆசுதோஷ் மஜூம்தார், ஸ்வாமி தீரேந்த்ர பிரம்ஹசாரி, டாக்டர் டி வி. ஸூப்பாரெட்டி (ஹைதராபாத்) ஸ்ரீ P. V. சர்மா (காசி) ஸ்ரீ G S. மேல்கோடே (டெல்லி) ஸ்ரீ அனந்ததிரிபாடி சர்மா பெர் ஹாம்பூர்) ஸ்ரீ பிரபாகர் சட்டர்ஜீ, டாக்டர் C. துவாரகாநாத், டாக்டர் V. நாராயணஸ்வாமி அய்யர் வைத்யஸ்ரீ B வைத்யநாதன் (சென்னை) வைத்ய ஸ்ரீ ஹரிதத் சாஸ்திரீ (பம்பாய்) கீர்த்திசர்மா, ஸ்ரீ P.T K. நம்பீசன் முதலிய நாற்பதுக்கு மேற்பட்ட வைத்யர்கள் கருத்துரைகள் வழங்கியுள்ளார்கள்.

திரிதோஷ சித்தாந்தத்திற்கும் ஜீவாணுவாதத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள், ஸம்ஸ்கிருதபாஷை மருத்துவத்திற்கு அளித்துள்ள உதவி. அஷ்டாங்கஹிருதயத்திற்கு இதுவரை வெளியாகாதிருக்கும் வைடூர்யக பாஷ்ய உரை, மதுமேஹத்தில் யோக சிகித்ஸை கிருத்ரஸியில் ஆயுர்வேத சிகித்ஸை, விஷ சிகித்ஸை ரஸ சிகித்ஸை, தாதுவஹ ஸ்ரோதஸ்ஸூகளில் நடக்கும் ஸம்வஹன முறை, ஸூச்ருதரின் சல்யமுறை, ஆயுர்வேத – நவீன வைத்யமுறைகளில் காணப்பெறும் வேறுபாடுகள், சுவாஸரோக சிகித்ஸை, பஞ்சகர்ம சிகித்ஸை, திரவ்யகுண விஞ்ஞானம், லோஹங்களின் சோதன மாரண முறைகள், ஜோதிஷம் மருத்துவத்திற்குத் தரும் உதவி என்பது முதலிய பல விஷயங்களில் கருத்துரைகள் வழங்கப்பெற்றுள்ளன. இந்தக்கருத்துரைகளின் சுருக்கமான குறிப்புகள் முன்னதாகவே அச்சடிக்கப் பெற்று கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு வழங்கப் பெற்றுள்ளது.

வெளிநாடுகளிடையே ஆயுர்வேதத்தின் பெருமையைப் பரப்புவதற்கான முயற்சியில் முதன்மை பெறும் இந்தக் கருத்தரங்கு அடுத்தடுத்து நடக்கவேண்டும். இந்தக்கருத்தரங்குகளின் மூலம் ஆயுர்வேத ஆராய்ச்சியிலும் தொழிற் பயிற்சியிலும் சிறந்த அபிவிருத்தி ஏற்பட நல்ல முறைகள் கண்டுபிடிக்கப்பெற்று அவை கையாளப்பெற்று ஆயுர்வேதத்தின் வருங்காலம் சிறப்பாக விளங்கக்கூடும் என்று வைத்ய உலகம் எதிர்பார்க்கும்.

ஆரோக்கிய கல்பத்துருமம்

விஸர்ப்ப சிகித்ஸை

ரேணுக விஸர்ப்பம் (தொடர்ச்சி)

தாத்ரியாதி தைலம்: நெல்லிமுள்ளியை இடித்துக் கஷாயம்: நொச்சி வில்வ இலை தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகளின் சாறு; மஞ்சிட்டி, கோஷ்டம், பச்சிலை, ஏலரிசி, லவங்கப்பட்டை, கச்சோரம், தகரவிதை, சந்தனம் இவைகளின் கல்கம்; நல்லெண்ணெய் அல்லது தேங்காய்-எண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சவும். எண்ணெய்க்கு மூன்று பங்கு விருச்சிப்பூவின் சாறு சேர்த்து காய்ச்சவும். தலைக்குத் தேய்த்து ஸ்னானம் செய்ய நல்லது. மேல் ஸ்னானம் செய்ய கோரைக்கிழங்கும் நெல்லிக் காயும் போட்டுக் காய்ச்சிய வென்னீரை உபயோகப்படுத்திக் கொள்ளவும்

லோத்ரவல்காதி தைலம்: லோத்ரப்பட்டை, சித்தாமுட்டி வேர், விலாமிச்சைவேர், கொம்பரக்கு, நால்பாமரப்பட்டை இவைகளின் கஷாயம்; நன்னாரி விலாமிச்சை வேர், தகரவிதை, தேவதாரு, சதகுப்பை, ஸரள தேவதாரு, ஒட்டுப்புல், கோஷ்டம், அகர், செஞ்சந்தனம், வெள்ளை குங்கிலியம், மஞ்சிட்டி, அதிமதுரம், ஞாழல்பூ, பச்சிலை — இவை கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய்; இதை தைலம் காய்ச்சி கழுத்துக்குக் கீழுள்ள பாகத்தில் தடவி ஸ்னானம் செய்யவும், ஸ்னானம் செய்ய, விருச்சியிலை, விலாமிச்சைவேர், தேவதாரு இவையிட்டு வென்னீர் தயாரித்து இளஞ்சூடாக ஸ்னானம் செய்யவும்.

இந்த முறைகளால் ரேணுக விஸர்ப்பம் தணியும், தணியா விடத்து, பரங்கிப்பட்டையை யோகங்களில் சேர்த்து உபயோகிக்க நல்ல குணம் தரும்.

க்ஷார விஸர்பம்

தலை, எலும்பு, சந்திகள், பக்கங்கள் இவைகளில் வலி, மலபந்தம், ஜ்வரம் எல்லா நேரத்திலும இருக்கும். வீங்கி உளுந்து போன்ற சினப்புகள் ஏற்படும். சினப்புகளின் நடுவில் சுண்ணும்பு தடவியது போலிருக்கும் வேகமாக சரீரம் முழுதும் வியாபித்து கண்கள் அதிகமாக சிவந்திருக்கும் இதுக்ஷார விஸர்பம் எனப்படும்.

இதில் தேங்காய் பாலில் மஞ்சிட்டியையும் கடுக்காய் விதை யையும் அரைத்து அடிக்கடி மேல் பூசவும். கஞ்ஜிக் கொட்டத்தின் வேர் பட்டையையும் மஞ்சிட்டியையும் தேங்காய் பாலில் அரைத்து பூசலாம். அல்லது விருச்சிப்பூ, மரமஞ்சள் தோல், அதிமதுரம், சந்தனத் தூள் இவைகளைத் தேங்காய் பாலில் அரைத்தும் தடவலாம்.

வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, நிலவேம்பு, வேப்பம்பட்டை கடுக்காய் மருதம்பட்டை, நன்னாரிவேர், நெல்லிமுள்ளி, கண்டங் கத்திரி பேய்புடல், மஞ்சள், மரமஞ்சள் இவைகளைக் கஷாயமிட்டு கடுகு ரோஹிணித் தூளும் தேனும் சேர்த்துச் சாப்பிடலாம் மல மிளகக் கறந்த சூட்டுள்ள பாலுடன் கருஞ்செவதை சூர்ணத்தைச் சாப்பிடுவதும் நல்லது.

தும்பைப்பூ, வாய்விடங்கம், கோரைக்கிழங்கு, விருச்சிவேர், பிரமிப்பூண்டு, கருங்காலி, வேப்பம்பட்டை, பேய்புடல், முள்ளுக் கத்திரி வேர் இவைகளின் கஷாயத்தைத் தேனுடன், அஞ்சனக் கல்லும் அதிமதுரமும் தூள் செய்து போட்டோ, ஜீரகத்தைத்தூள் செய்து போட்டோ சாப்பிடலாம்.

அருகம்புல், பேய்புடல், புத்தரிச் சுண்டைவேர் மேல் பட்டை, விருச்சிப்பூ, கச்சோரக் கிழங்கு, பிரமிப்பூண்டு, சித்தாமுட்டி வேர், அதிமதுரம், தேவதாரு, நன்னாரிவேர், சந்தனக்கட்டை, விலா மிச்சைவேர், திரிபலே, கோரைக் கிழங்கு இவைகளைக் கஷாயம் வைத்து தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது.

பலாராஸ்னாதி தைலம்: சித்தாமுட்டி வேர், சித்தரத்தை, சீந்திற்கொடி இவைகளின் கஷாயம் 4 பங்கு, தேங்காய் எண்ணெய் ஒரு பங்கு, வெற்றிலேச்சாறு, மஞ்சள்சாறு, சீந்தில் கஷாயம் இவை ஒரு பங்கு, தேவதாரு, வசம்பு, குந்துருக்கம், ஞாழல்பூ, தகரம், விலாமிச்சைவேர், சந்தனம், கோஷ்டம், அதி மதுரம், கோரைக்கிழங்கு, வெட்டிவேர் இவைகளை அரைத்துக் கலக்கித் தைலம் வடித்துக் கொள்ளவும். இந்த தைலம் கரப்பானில் நல்லது.

முஸ்தாகதகாதி தைலம்: தேத்தான், கோரைக்கிழங்கு இவை களின் கஷாயம், அருகம்புல், தண்ணீர் விட்டான் கிழங்கு இவை களின் ஸ்வரஸம், நன்னாரி, விலாமிச்சைவேர், அதிமதுரம், தேவ தாரு. த்ரிபலே, கருஞ்சீரகம், கச்சூரிக் கிழங்கு, அன்னாசி வித்து, ஞாழல்பூ, தகரவிதை, சந்தனத்தூள், வெள்ளைக் குங்கிலியம், கல்பாசி இவைகளின் கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது

நல்லெண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சி வடி கட்டி தலைக்குத் தேய்த்துக்கொள்ளவும், ஸ்னானம்செய்ய கஞ்ஞிக் கொட்டத்தினிலை இலந்தை இலை இவ்விரண்டையும் கொண்டு வென்னீர் தயாரித்துக்கொள்ளவும்.

லாக்ஷாபலாதி தைலம்: கொம்பரக்கு, சித்தாமுட்டி வேர், அமுக்கராக்கிழங்கு, கஞ்சிக்கொட்டத்தின் வேர் மேல் தோல் இவை கொண்டு கஷாயம்; மஞ்சிட்டி, கோஷ்டம், அதிமதுரம், சந்தனத்தூள், இவைகள் கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சி வடிகட்டி கழுத்தின் கீழுள்ள பாகங்களில் தேய்த்து ஸ்னானம் செய்ய நல்லது.

அஷ்டவல்கல தைலம்: வெம்பாடம்பட்டை, கடம்பம் பட்டை, எருக்கம் வேர் பட்டை, ஏகநாயகத்தின் வேர் பட்டை, நால்பாமரப்பட்டை இவைகளின் கஷாயம்; கருங்காலிக் கட்டை, கல்பாசி, மஞ்சிட்டி, நன்னாரி, கோரைக்கிழங்கு, கருஞ்சீரகம், விலாமிச்சை, வெட்டி வேர், திரிபலை, பூலாங்கிழங்கு சந்தனத்தூள், ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை இவைகளின் கல்கம்; இவைகளை முறைப்படி தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய்யில் கலக்கி, எண்ணெய்க்குச் சமம் தயிர் தெளிவும் கூட்டிக் காய்ச்சி வடிகட்டி, கழுத்துக்குக் கீழுள்ள அங்கங்களில் தேய்த்து ஸ்னானம் செய்யலாம்.

நீல விஸர்ப்பம்: கருத்த நிறத்துடன் மிகவும் உயர்வுடன், புகை நிறமுள்ள சினப்புடனும் சினப்புகள் நடுவில் முள் செலுத்தியதுபோல் கூரான முகத்துடன் கூடியிருப்பதும், கண்ணீர் அதிகமாகப் பெருகுதலும், உடல் முழுவதும் கடுப்பு வலியுடன் கூடியுமிருப்பது கரும் விஸர்பமாகும்.

மரமஞ்சள் தோல், புங்கம் பட்டை, அல்லது கருவேலம் பட்டை இவைகளைத் தேங்காய் பாலிலிட்டு அரைத்து மேல் பூச வலி குறையும். அதிமதுரம், கோரைக் கிழங்கு வரள் மஞ்சள், ஆனையடிக் கிழங்கு இவைகளைத் தேங்காய்ப் பால் விட்டரைத்து தேய்க்கலாம் திரிபலை, கோரைக்கிழங்கு இவ்விரண்டையும் அரைத்துத் தேய்க்கலாம்.

அவுரி வேர், சந்தனத்தூள், கோரைக் கிழங்கு, சிறுகீரை, திரிபலை இவைகளைக் கஷாயமாக்கித் தேன் சேர்த்துச் சாப்பிடலாம். புத்தரிச் சுண்டை வேர். ஆடாதோடை வேர், நிலவேம்பு, கருஞ்சீரகம், வேப்பம்பட்டை இவைகளின் கஷாயத்தை தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது.

தலைக்கும் உடலுக்கும் தடவ தைல முறைகளை க்ஷார விஸர்பத்தில் கூறியவாறே தயார் செய்யவும்.

ஆக வாயுவால் ஏற்படும் 8 கரப்பான் வகைகளின் குறியும் சிகித்ஸையும் விவரமாகக் கூரப்பட்டது.

பித்த விஸர்ப்பங்கள்

மாஷவிஸர்பம்: இது ஆரம்பிக்கு முன் தலையில் சூடும், தேகத்தில் ஆங்காங்கு எரிச்சலும் ஜ்வரமும் மூன்று நாட்களுக்கு இருக்கும் தடிப்பு அதிக கனமில்லாது ஏற்படும். தொட முடியாத படி வேதனை, மஞ்சள் கலந்த சிவப்பு நிறம்; அதைச் சுற்றி உளுந்துபோன்று சினப்புகள் காணப்படும். உடல் அசதி, தளர்ச்சி, மலமிளகிப் போதல், அரோசகம், கடும்வலி, வாயில் கசப்பு, தலை சுற்றுதல், நாவரட்சி, புகைந்துவருதல், கண்ணெரிச்சல், காதுகேளாமை, இவைகள் இதில் காணும்.

சிகித்ஸை: விருச்சி வேர் பட்டையையோ, அதிமதுரத்தையும் சந்தனத்தையுமோ தேங்காய்ப் பாலிட்டுஅரைத்து மேல் பூசலாம். அதிமதுரம், விலாமிச்சை வேர், நன்னாரி வேர், ஜீரகம், தானிக்காய் கொட்டை இவைகளைத் தனியாகவும் விருச்சி வேர் பட்டை சேர்த்தும் தேங்காய்ப் பாலிட்டு அரைத்துப் பூசலாம்.

வட்டத்திருப்பி, பேய்ப்புடல், மரமஞ்சள் தோல், கோரைக் கிழங்கு, வேப்பம்பட்டை இவைகளின் கஷாயத்தை தேன் சேர்த்துக் காலையில் சாப்பிடலாம். கொன்னை வேர்ப்பட்டை கஷாயத்தையும் தேன் சேர்த்துச் சாப்பிடலாம். பிரமிப் பூண்டு, கடுகுரோகிணி, விலாமிச்சை வேர், நன்னாரி வேர், கோரைக் கிழங்கு வெட்பாலையரிசி, புத்தரிச் சுண்டைவேர், வேப்பம்பட்டை, சிறுகாஞ்சூரி வேர், ஆடாதோடை வேர் இவைகளின் கஷாயத்தையும் தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

அஞ்ஜனுஷ்டம சூர்ணம்: மஞ்சிட்டி, நன்னாரி வேர், கோரைக் கிழங்கு, அரத்தை, அதிமதுரம் சந்தனத்தூள், விலாமிச்சை வேர் இவை வகைக்கு ஒரு பங்கு. அஞ்சனக் கல் எல்லாவற்றிற்கும் சமம், இவைகளை நன்கு தூள் செய்து முலைப்பாலிட்டுக் குழப்பி நெற்றியிலிட தலைவலி குறையும் வெண்ணெய்யிலோ, கல்யாண முருங்கையிலைச் சாற்றிலோ குழைத்துப்போடலாம். கை கால் அங்கங்களில் ஏற்படும் எரிச்சல், தலைவலி, தலையில் எரிச்சல், கண்ணெரிச்சல் இவை போகும்.

பிருங்கராஜாதி தைலம்: நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் ஒரு வீசை, கரிசலாங்கண்ணி, சீந்திற்கொடி, அருகம் புல், விருச்சிப்பூ இவைகளின் சாறு அல்லது கஷாயம் எல்லாம் சம அளவில் மொத்தம் 3 லிட்டர் விலாமிச்சை வேர், வெட்டிவேர், இவைகளில் வகைக்கு சம அளவில் மொத்தம் அரைக்கால் லிட்டர், இதைத் தைலமாகக் காய்ச்சி வடிகட்டி தலைக்குத் தேய்த்து ஸ்னானம் செய்விக்கலாம்.

முஸ்தாமிருதாதி தைலம்: கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, சிற்றுமுட்டி வேர், நெல்லிமுள்ளி - இவைகளின் கஷாயம் 3 லிட்டர் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் 1 லிட்டர் விருச்சிப்பூச் சாறு முக்கால் லிட்டர் மஞ்சிஷ்டி, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம் செஞ்சநதனம், தேவதாரு, கல்மதம், ஸ்ரளதேவதாரு, விலாமிச்சம் வேர், தகரவிதை, கச்சோரம், வெட்டி வேர், இவைகளின் தூள் 200 கிராம் கல்கமாக்கி இவைகளைத் தைலம் காய்ச்சி வடிகட்டி உடம்பில் தேய்த்து ஸ்நானம் செய்யலாம்

முன் கூறிய அஷ்ட வல்கல தைலத்தை உடம்பில் தேய்த்து ஸ்நானம் செய்யலாம். விருச்சியிலையும், நெல்லிக்காயும் போட்டு வென்னீர் தயாரித்து ஸ்நானம் செய்யலாம். இம்முறைகளை எல்லா பித்தவிஸர்பங்களிலும் பொதுவாக உபயோகிக்கலாம்.

மரிச விஸர்பம்: ஒரு நாள் ஜ்வரமிருந்து உடலில் கருஞ்சிகப்பு நிறத்தில் தடிப்பும் மிளகு போன்ற சினப்புகளும் சிறிது நேரத்திற்குள் ஏற்படும். இது மரிச விஸர்பமாகும்.

சிகித்ஸை: கொன்னை வேர் பட்டை, தும்பைப்பூ, வாய் விளங்கம், விரளிமஞ்சள், ஆடாதோடை வேர், மாசிக்காய், அதிமதுரம், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், கச்சோரம், சந்தனம் கருஞ்சீரகம், தென்னம்பூ அரிசி, கருங்காலி வைரம், விலாமிச்சை வேர், வெட்டி வேர், வட்டத்திருப்பி, தாமரை கேஸரம், கார்போக அரிசி, ஓமம், கடுகுரோகிணி, பர்படகம், வசம்பு, பிரம்மி இவை கொண்டு கஷாயம் வைத்துத் தேன் சேர்த்துக் கொடுக்கலாம். வேப்பம்பட்டை, சீந்திற்கொடி, சுக்கு, ஆடாதோடைவேர், விரலி மஞ்சள், கோரைக்கிழங்கு இவைகளைக் கஷாயம் வைத்துத் தேன் சேர்த்துக் கொடுக்கலாம்.

கேதகீபல்லவாதி தைலம்: தாழை இலை, அருகம்புல், சீந்திற் கொடி, தென்னம்பூ இவைகளின் சாறு 4 பங்கு, வாய்விளங்கம், ஏலரிசி, மல்லி, கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி, தகர விதை,

சந்தனத்தூள், வாலுளுவையரிசி, திரிபலை, அதிமதுரம், கார்போகரிசி, குந்துருக்கம் இவைகளின் கல்கம் அரைக்கால் பங்கு, நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் ஒரு பங்கு, இவைகளைக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும், இது தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்ய நல்லது. ஸ்நானம் செய்ய, நெல்லி முள்ளி, கல்யாண முருங்கைப்பட்டை இவைகளைப் போட்டுக் காய்ச்சிய வென்னீர் நல்லது உடலுக்கு கஞ்சிக்கோட்டத்தின் இலையும் நால்பா மரப்பட்டையும் போட்டுக் காய்ச்சிய வென்னீரும் நல்லது.

கோல விஸர்பம்

தலைசுற்றுதல், வாந்தி, சுவாஸம், எரிச்சல், அருசி, புகைந்து வருதல். இவைகளுடன் மூன்று தினம் ஜ்வரம் ஏற்படும். கடினமாக மஞ்சள் கலந்த சிவந்த தடிப்புகளில் இலந்தை விதை போன்று சினப்பும் ஏற்படும் தலை கனத்தலும், கண் சிவத்தலும், மலமிளகிப்போதலும் ஏற்படும்.

சிகித்ஸை: இலந்தைப் பட்டையையோ அரளிப் பூவையோ தேங்காய்ப் பாலிட்டரைத்து மேல் தடவி வீடவும், பேய்புடல், திரிபலை, வேப்பம்பட்டை, நால்பா மரப்பட்டை, கருஞ்சீரகம் இவைகளைக் கஷாயம் வைத்துத் தேன் சேர்த்துச் சாப்பிடலாம். ஏழிலம்பாலைப் பட்டை, விரலிமஞ்சள், அதிமதுரம், புல்லாளி இலை, இவைகளைக் கஷாயம் வைத்துத் தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

க்ஷீராதி தைலம் மூங்கில் குறுத்து, அரளியிலை, மாவிலை, வெற்றிலை இவைகளின் ஸ்வரஸம், திரிபலை, கருஞ்சீரகம், இவைகளின் கல்கம் இதுகொண்டு தைலம் காய்ச்சி தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்விக்கலாம். உடம்பிற்கு அஷ்டவல்காதி தைலமும், மிளகு போட்டுத் தயாரித்த வென்னீர் ஸ்நானத்திற்கும், மற்ற பொதுவான பித்த விஸர்ப்ப சிகித்ஸைகளும் நல்லது.

கிருமிக்னக விஸர்பம்

வாய்விளங்கம் போன்று உருவுடன் முகத்தில் வெளுப்பும் மற்றவிடத்தில் சிவந்த நிறமும் உள்ள சிவப்புகளுடன் தசையுள்ள இடங்களில் ஏற்படும் தடிப்பிற்கு விடங்க (க்ரிமிக்னக) விஸர்பம் எனப்படும்.

சிகித்ஸை: அருகம்புல்லையும் கருங்காலி வைரத்தையும் தேங்காய்ப் பாலிட்டு அரைத்துப் பூசலாம். கோரைக்கிழங்கு,

கருங்காலி வைரம், அதிமதுரம் மரமஞ்சள், கொத்துமல்லி விதை, சந்தனத்தூள்-இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துக் கொடுக்கலாம் கருங்காலி வைரம், வெட்பாலையரிசி, தண்ணீர் விட்டான் கிழங்கு, பேய் புடல், இலந்தையிலை, புத்தரிச்சுண்டை வேர் பட்டை, ஆடாதோடைவேர், கோரைக்கிழங்கு, தும்மட்டி வேர், விரலி மஞ்சள், மரமஞ்சள் தோல், வட்டத்திருப்பி, புங்கம்பட்டை, ஏலரிசி. கருஞ்சீரகம், கோஷ்டம், அதிமதுரம், அவுரி வேர், தார் தாவல்வேர், வாய்விடங்கம் இவைகளைக் கஷாயமிட்டு தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

ஸப்தஸார தைலம்: நெல்லிமுள்ளி, அருகம்புல், சீந்திற்கொடி, கரிசலாங்கண்ணி, ஜாதிமல்லி இலை, வெட்டிவேர், மூங்கில் குருத்து இவைகளின் கஷாயம் அல்லது சாறு 4 பங்கு. கோஷ்டம், அதிமதுரம், மருள் வேர், கச்சோரம், சந்தனத்தூள், கருஞ்சீரகம், புல்லானி வேர், அமுக்கராக்கிழங்கு, திரிபலை-இவை 8ல் ஒரு பங்கு நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் ஒரு பங்கு, இதைக் காய்ச்சி உள்ளுக்கு சாப்பிடவும். மேலுக்கு தடவவும் நல்லது ஸ்நானத்திற்கு நெல்லிமுள்ளி வென்னீர் நல்லது. மற்ற கரப்பான்களில் கூறியுள்ளவைகளையும் இங்கு செய்து கொள்ளலாம்

உதும்பர விஸர்பம்

சரீரத்தில் தளர்ச்சி, தலை வேதனை, தலை சுற்றுதல், நாவரட்சி ஜ்வரம் இவைகள் உண்டாகி பின்னர், சிவப்பும் கருப்பும் கூடிய நிறத்தில் தடிப்பும் அதில் தாமிர நிறத்தில் அத்திப்பழம் போன்ற உருவத்தில் முகத்தில் வெளுப்புடன் கூடிய சினப்புகள் நிரம்பி காணப்படும். வலி எரிச்சல் மிகுந்திருக்கும்.

சிகித்ஸை: தான்றிவித்து. மஞ்சிட்டி, அதிமதுரம் இவைகளைத் தேங்காய் பாலிலரைத்து அடிக்கடி தேய்க்கவும். பதிமுகம், கோரைக்கிழங்கு, அதிமதுரம், நன்னாரி இவைகளின் கஷாயத்தை தேன் விட்டுச் சாப்பிடவும். பிரம்மி, சீந்தில், பெருங்குரும்பைவேர், வாய்விளங்கம், கடுகு ரோகிணி, கோரைக்கிழங்கு, புத்தரிச்சுண்டை வேர் மேல் தோல், கொத்துமல்லி விதை, சிறுகாஞ்சூரி வேர், மூவிலை வேர்-இவைகளின் கஷாயத்தையோ, மரமஞ்சள் தோல், கருங்காலி வைரம், வெட்பாலையரிசி இவைகளின் கஷாயத்தையோ கருஞ்சீரகத் தூளும் தேனும் சேர்த்துக்கொடுக்கவும்.

வரீகந்தாதிதைலம், தண்ணீர்விட்டான்கிழங்கு, சிற்றாமுட்டி வேர் இவைகளின் கஷாயத்தில் நன்னாரி வேர், கோஷ்டம்,

சந்தனத்தூள், ஸரளதேவதாரு, தேவதாரு, ஏலரிசி, அதிமதுரம், இலுப்பைப்பூ இவைகளைக் கல்கமாக அரைத்துக் கலந்து தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் காய்ச்சி வடிகட்டித் தேய்த்து ஸ்நானம் செய்யவும். திரிபலையைக் கஷாயம் வைத்து எண்ணெய் காய்ச்சி ஸ்நானம் செய்யலாம்.

நிசாபர்படகாதி தைலம்: பசுமஞ்சள், பர்படகம், தண்ணீர் விட்டான் கிழங்கு, வெற்றிலை, சீந்திற்கொடி இவைகளின் கஷாயத்தில் நால்பா மரப்பட்டை, திரிபலை, சந்தனத்தூள், தேவதாரு, கச்சோரம், அதிமதுரம், கொம்பரக்கு, வெம்பாடம் பட்டை, நன்னாரி வேர், மஞ்சிட்டி, தகர விதை, அகில் இவைகளை கல்கமாயும் சேர்த்து நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி ஸ்நானம் செய்விக்கலாம்.

அரசின் இலை, தேத்தாங்கொட்டை இவை இரண்டையும் போட்டோ, நால்பா மரப்பட்டை போட்டோ வென்னீர் தயாரித்து ஸ்நானம் செய்விக்கவும்.

சிஞ்சா விஸர்பம்

புளியங்கொட்டை போன்று தலையில் சினப்புடன் இது உண்டாகும். தலைவலி, கண் எரிச்சல், உடம்பு வலி இவைகளுடன் ஜ்வரம் காணும், சிலருக்கு பிடரியில் இரு மென்னி நரம்புகளிலும், கக்கங்களிலும் முதுகிலும் துடையிடுக்கிலும் முழங்காலின் பின் பாகத்திலும் கணுக்காலிலும் இது ஏற்படும். உடன் பழுத்துத் தோல் வெடித்து ஜலம் வடியும்

சிகித்சை : மஞ்சிட்டி, கஞ்ஞிக்கொட்டத்தின் வேர், விருச்சி வேர் பட்டை இவைகளைத் தேங்காய்ப் பாலிலரைத்து மேல் பூசவும். திரிபலை, வேப்பம்பட்டை இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து தேன் சேர்த்துக் கொடுக்கலாம். நன்னாரி, கருங்காலி வைரம், விலாமிச்சை வேர், அதிமதுரம், கோரைக் கிழங்கு, சந்தனம், ஆடாதோடை வேர், பேய்புடல் இவைகளின் கஷாயமும் தேன் சேர்த்துக் கொடுக்கலாம்.

அஸனாதி தைலம் : வேங்கை வைரம், தண்ணீர்விட்டான் கிழங்கு, அதிமதுரம், சீந்திற்கொடி, வில்வ வேர், இவைகளின் கஷாயம், சிற்றுமுட்டி வேர், பேராமுட்டி வேர், கோரைக் கிழங்கு, அரத்தை, சரள தேவதாரு, சந்தனத்தூள், கடுகுரோகிணி, தேவதாரு, மஞ்சிட்டிப்பொடி, அன்னாசி விதை, புனுகுச் சட்டம், லவங்கப்பட்டை, குந்துருக்கம், நான்முகப்புல், ஏலம், கருஞ்சீரகம்

பச்சிலை, கச்சூரம் இவைகளின் கல்கம், தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்துத் தைலம் வடிக்கவும் நல்லது.

சாரிபாதி தைலம்: நன்னாரி வேர், அதிமதுரம், கோரைக் கிழங்கு, சித்தாமுட்டி வேர், தேவதாரு இவைகளின் கஷாயம்; கல்யாண முருங்கையிலை, அருகம்புல், பூவரசிலை, இவைகளின் சாறு, ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, விலாமிச்சை வேர், கோஷ்டம் அதிமதுரம், சந்தனத்தூள், வெண்சந்தனம், தகர விதை, ஒட்டுப்புல், சித்தரத்தை கல்மதம், வெட்டிவேர், இவை கல்கம், தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி உபயோகிக்கவும்

விரணம் பழுத்து உடைந்தால் விரணத்தைப்போல் சிகித்ஸை செய்யவும். அதிகமாகப் பழுக்காமல் தகுந்த சிகித்ஸை முறைகளைக் கொண்டு பாதுகாப்பது அவசியம்.

வல்லி விஸர்பம்

அரிசி அளவுள்ள சினப்புகளுடன் கொடி போன்று நீண்டும் வளைந்தும் காணப்படுவது வல்லி விஸர்ப்பமாகும்.

சிகித்ஸை: மகிழம்பட்டையையோ, வெம்பாடம் பட்டையையும் நன்னாரி வேரையுமோ தேங்காய்ப்பால் விட்டரைத்து அடிக்கடி பூசலாம். அல்லது கஞ்ஜிக்கொட்டத்தின் வேர், அதிமதுரம், தானிக்காய் விதை, நன்னாரி வேர், கோரைக் கிழங்கு இவைகளைத் தேங்காய்ப்பால் விட்டரைத்துப் பூசலாம். அதிமதுரம், நீரூரி வேர், கொன்னைவேர் பட்டை, புத்தரிச்சுண்டைவேர் பட்டை, ஆடாதோடை வேர், பதிமுகம், மாசிக்காய், தென்னம்பாளையரிசி, கஞ்ஜிக்கொட்டம் வேரின் மேல்தோல், வேப்பம்பட்டை, சந்தனம், பெருங்குரும்பை வேர், கோரைக் கிழங்கு, ஏகநாயகம் வேர் இவைகளைக்கொண்டு கஷாயம் வைத்து தேன் சேர்த்துச் சாப்பிடலாம். கடம்பின் பட்டை, திரிபலை, ஆடாதோடை வேர், பேய்ப்புடல், கருங்காலிக்கட்டை, கோரைக்கிழங்கு இவை வகைக்குச் சமனெடை. விருச்சிப்பூ எல்லாவற்றிற்கும் சமம்; இவ்விதம் சேர்த்துக் கஷாயம் வைத்துத் தேன் சேர்த்துக் கொடுக்க நல்லது.

அஷ்டபல்லவ தைலம்: ஆல், முடக்கத்தான். அருகு, புல்லானி, கஞ்ஜிக்கொட்டகம், கையாந்தகரை, நாவல், லோத்திரம் இவைகளின் இலைகளை இடித்துப் பிழிந்தெடுத்த சாறு 4 பங்கு, தேவதாரு வெம்பாடம் பட்டை, நன்னாரிவேர், வாய்விளங்கம், சந்தனம்,

அதிமதுரம், திரிபலை, கச்சோரம், தக்கோலம், ஜடாமாஞ்சி இவை கல்கம் $\frac{1}{8}$ பங்கு, நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் ஒரு பங்கு சேர்த்துத் தைலம் காய்ச்சி வடிகட்டி உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் நல்லது. தலைக்கு ஸ்னானம் செய்ய நெல்லிக்காய் போட்டு காய்ச்சிய வெந்நீர் நல்லது. இத் தைலம் எல்லா பித்த விஸர்பங்களிலும் நல்லது

த்ரோணுஷ்டம தைலம்: சீந்தில்கொடி, வாழைக்கிழங்கு, பிரப்பங் குருத்து, தண்ணீர்விட்டான் கிழங்கு, பசுமஞ்சள், கல்யாண முருங்கையிலை, கருநொச்சியிலை, கருந்தும்பையிலை, இவைகளின் சாற்றில், கச்சோரக் கிழங்கு, அதிமதுரம், கருங்காலி வைரம், விளாமிச்சம்வேர், சந்தனம், நன்னாரிக்கிழங்கு, ஸரள தேவதாரு, நான்முகப் புல், லவங்கப்பட்டை, தகரம், தேவதாரு கல்மதம், கோஷ்டம் ஜடாமாஞ்சி இவைகளைக் கல்கமாக்கி தேங்காய் எண்ணெய்யோ நல்லெண்ணெய்யோ காய்ச்சி வடிகட்டி ஸ்னானம் செய்விக்கலாம். அஷ்டபல்லவ தைலத்தைவிட நல்லது. தலைவலி, தலையில் சொட்டை விழுதல், தலையில் முளை ஏற்படுதல் நரை இவைகளிலும் மிகவும் நல்லது.

ஹயகந்தாதி தைலம்: அமுக்கராக்கிழங்கு, சிறுவாகைப் பட்டை, சிற்றாமுட்டி வேர், நால்பாமரப்பட்டை இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து, அத்துடன் தேவதாரு, மஞ்சட்டித் தூள், கச்சோரக் கிழங்கு, சந்தனம், அதிமதுரம், அரத்தை, திரிபலை, ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை, கல்மதம் இவைகளைக் கல்கமாக்கிப் போட்டுக் காய்ச்சிய தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய். கழுத்துக்குக்கீழுள்ள பாகங்களில் ஏற்படும் விஸர்பத்தில் மிகவும் சிறந்தது.

மேலுக்கு ஸ்னானம் செய்ய சிற்றாமுட்டிவேர், மஞ்சள் இவை களையோ நால்பாமரப்பட்டைகளையோ போட்டுக் காய்ச்சிய வெந்நீரை விட்டு கழுத்துக்குக்கீழுள்ள பாகங்களை அலம்பிக் கொள்ளுதல் நல்லது.

ரக்த விஸர்பம் (செங்கரப்பான்)

சிவந்த சினப்புகளுடன், சிவந்து மிகுந்த வேதனையுடன் க்ஷணத்தில் உடல் முழுவதும் பரவும் வீக்கமுள்ள விஸர்பம் இது. மலமிளகிப்போதல், வாந்தி, சுவாஸம், தலைவலி தொண்டைக் கட்டு, மூத்திரத்தில் தூசி மிதப்பு—இவை இதன் அறி குறிகள்.

சிகித்ஸை: விருச்சிவேர் மேல் பட்டையையோ அல்லது வெம்பாடம்பட்டையையும் நன்னாரிவேரையுமோ தேங்காய்ப் பாலில் அரைத்து மேல்பூசலாம். மரமஞ்சள் தோல், கருங்காலி, அதிமதுரம், கீரைப்பாலை தாமரைகேஸரம், கருஞ்சீரகம், இவைகளைக் கஷாயம் வைத்துத் தேன் சேர்த்துச் சாப்பிடலாம். வெளுத்த செம்பருத்திவேர், முன்னைவேர், கடுக்காய், கோரைக் கிழங்கு, நால்பா மரப்பட்டை இவைகளின் கஷாயத்தையும் தேன் சேர்த்து சாப்பிடலாம். தேற்றான்வித்து வெள்ளெருக்குவேர், அடபதியன் கிழங்கு, கஞ்சிக்கொட்டத்தின்வேர் பட்டை, விருச்சிப்பூ, மரமஞ்சள் தோல், கோரைக்கிழங்கு, மஞ்சிட்டி, நன்னாரிக்கிழங்கு இவைகளைக் கஷாயம் வைத்துத் தேன் சேர்த்து சாப்பிடலாம். மூன்று நாட்களில் வியாதி சமனமடையும்.

வில்வாதி தைலம்: வில்வவேர், நெல்லிக்காய், சிற்றாமுட்டி வேர், அதிமதுரம், கருங்காலி வைரம், தேவதாரு இவைகள் வகைக்கு சமனெடை, எல்லாவற்றிற்கும் சமம் சீந்திற்கொடி — இவைகளின் கஷாயம்; சந்தனம், செஞ்சந்தனம், அதிமதுரம், நன்னாரிக்கிழங்கு விளாமிச்சை, வெட்டிவேர், ஆம்பல் கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, தாமரை வளையம், தாமரை கேஸரம் இவைகளின் கல்கம்; நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்; எண்ணெய்க்கு சமம் அருகம்புல் (புட்டவியலில் எடுத்தது) ஸ்வரஸம். அல்லது கஷாயம். இவைகளைக்கொண்டு தைலம் தயாரித்து மேலுக்குத் தடவி உள்ளுக்கும் சாப்பிட வியாதி தணியும்.

க்ஷீரிவல்காதி தைலம்: நால்பாமரப்பட்டை, வரள் மஞ்சள், விளாமுச்சம்வேர், கொம்பரக்கு, வெம்பாடம்பட்டை, நன்னாரிவேர் இவைகளின் கஷாயம்; மஞ்சிட்டி, இலுப்பை வைரம், அதிமதுரம், அஞ்சனக்கல், ஏலரிசி, ஸரளதேவதாரு சிறுநாகப்பூ ஜடாமாஞ்சி சந்தனம், காவிமண், திரிபலை வரள் மஞ்சள், மரமஞ்சள் தோல், அமுக்கராக்கிழங்கு, நாகணம், கோரைக்கிழங்கு தூணியாங்கம், நாயுருவி விதை, தகர விதை, கச்சோரக்கிழங்கு, தேவதாரு, அவுரிவேர், செங்கழுநீர் கிழங்கு, தாமரை கேஸரம் இவை கல்கம்; நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்; முதல்நாளிரவு வடித்த கஞ்சி எண்ணெய் அளவு; இவைகளைக் காய்ச்சி எண்ணெய் வடித்து உடல் முழுவதும் தேய்த்துக்கொள்ள நல்லது.

ஸ்நானம் செய்ய விருச்சிப்பூவிலை சேர்த்துத் தயாரித்த வெந்நீரோ, நால்பாமரப்பட்டை போட்டுத் தயாரித்ததோ நல்லது.

பவழ விஸர்பம்

இங்குமங்குமாக உயர்ந்து சிவந்த நிறத்தோடு கூடி உருண்டையான சினப்புகளுடன் நான்கு பக்கத்திலும் வியாபித்து அதிக உயரமில்லாத தடிப்புகள் ஏற்பட அதை ப்ரவாள (பவழ) விஸர்பம் என்பர்.

சிகித்ஸை: சிகப்பு அரளிப்பூவை தயிர்த் தெளிவு அல்லது இளநீர் விட்டரைத்து மேல் பூசலாம். அத்திப்பட்டையையோ வெம்பாடம் பட்டையையோ தேங்காய்ப் பாலிலரைத்துத் தடவலாம். சிறுவழுதினைவேர், நன்னாரி, வேப்பம்பட்டை, பேய்புடல், விளாமிச்சைவேர் சந்தனம், வல்லாரை, மாமஞ்சள் இவைகளைக் கஷாயமாக்கித் தேன் சேர்த்துச் சாப்பிடலாம். கோரைக்கிழங்கு பேய்புடல், வேப்பம்பட்டை, கடுகுரோகிணி, ஆடாதோடை, மரமஞ்சள், காஞ்சூரி, நிலவேப்பு, திப்பிலி, வெப்பாலைபட்டை, சந்தனம், வல்லாரை, நன்னாரி, வட்டத்திருப்பி, தும்மட்டிவேர் இவைகளின் கஷாயம் தேன்விட்டு சாப்பிடலாம்.

நளதாதி தைலம்: விளாமிச்சைவேர், வேங்கை வைரம், தேவதாரு, சித்தாமுட்டி அதிமதுரம், தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகளின் கஷாயம்; வாய்விளங்கம், மஞ்சிட்டி, குந்துருக்கம், திரிபலை இவைகள் கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய், சேர்த்துத் தைலம் வடித்துக்கொள்ளவும். ஸ்னானம் செய்ய நெல்விமுள்ளியும் கோஷ்டமும் போட்டுத் தயாரித்த வென்னீர் நல்லது.

சராவக விஸர்பம்

நடுவில் குழிந்து, வேர் பலமாகி, ஓரங்கள் கனத்து சிவந்து காணும் சினப்புகளுடன் வீக்கம் காண சராவகம் எனப்பெயர்.

சிகித்ஸை: எருக்கம் பழுப்பு அதிமதுரம் இவைகளைத் தேங்காய் பாலிட்டு அரைத்துப் பூசிக்கொள்ள நல்லது தாமரைக் கிழங்கு, மஞ்சள், அதிமதுரம், பேய்புடல், கடுகுரோகிணி ஆடாதோடை இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிடவும். வெட்பாலையரிசி, ஏலரிசி, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, கொத்துமல்லி விதை, வேப்பம்பட்டை, பர்படகம், கும்மட்டிவேர் இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துக்கொடுக்கலாம் கருங்காலி வைரம், கோரைக்கிழங்கு, மருதம்பட்டை, விருச்சிப்பூ இவைகளின் கஷாயம் குக்குலு சேர்த்துக் கொடுக்க நல்லது

பலாதிலகாதி தைலம்: சிற்றாமுட்டிவேர், மயில் எள்ளு பட்டை தேவதாரு, தாழைவேர், வேங்கை வைரம் இவைகளின் கஷாயம்; தேங்காய்பூ அரிசி, பச்சை நெல்லிக்காய், அருகின் புல்,

சீந்திற்கொடி இவைகளின் சாறு; ஏலரிசி, பேரேலம் அதிமதுரம் சந்தனத்தூள், பெருங் குரும்பைவேர், வெம்பாடம்பட்டை, நன்னாரிவேர், முள்ளிலவம்பட்டை, கச்சோரம், மஞ்சிட்டி பதிமுகம், விளாமிச்சைவேர், ஸரள தேவதாரு இவை கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய்; தைலபாக முறைப்படி காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும்.

கிருஷ்ணமுஞ்சாதி தைலம்: ஈஞ்ஞு (மலையாளம்) த்துளிர், வேங்கைத்துளிர், மருதின் துளிர், இலந்தைத் துளிர் இவற்றின் சாறு; அதிமதுரம், கோரைக்கிழங்கு, முள்ளிலவம்பட்டை, திரிபலை ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை, சிறுநாகப்பூ கச்சோரக்கிழங்கு அமுக்கரா, ஸரளதேவதாரு சந்தனத்தூள், ஸாம்பிராணி, ஜடா மாஞ்சி, தேவதாரு, தகரவிதை, கடுகுரோஹிணி, அஞ்சனக்கல், நன்னாரிகிழங்கு. அகில், கோஷ்டம், இவை கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய்; தைலபாக முறைப்படி காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும் இந்த கரப்பானில் நல்லது.

மேலுக்கு விடங்க விஸர்பத்தில் கூறியுள்ள ஸப்தஸார தைலத்தையும் ஸ்னாநத்திற்கு இலந்தை இலை, பலாவின் தானே பிரிந்த பட்டை இவைகளைக் கொண்டு தயாரித்த வென்னீரையும் உபயோகிக்கவும்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

இம்ப்காப்ஸ்
புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாகவில முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்பகாப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

IMPCOPS

உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
அடையார், சென்னை 20.

விற்பனை நிலையங்கள்: 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652
48, ஸொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875
16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/361/M TAM

VAIDYA CHANDRIKA APRIL 1972 Regd. No. M. 4081

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

☆

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27. Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.